Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0
பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 22 2-1947 மாசி௴ 10௳. { மலர் 20

# மதம் என்றால் என்ன?

## எது உண்மை மதம்?

### பெரியார் பேச்சு

(சென்றவாரத் தொடர்ச்சி)

உண்மையிலேயே நம்மைப் பொறுத்தவரையில், அதாவது திராவிட நாட்டில் உள்ள திராவிடர்களைப் பொறுத்தவரையில் மதசம்மந்தமாகப் பேசவேண்டுமானால் இங்குள்ள திராவிடர்களுக்குள் கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்பவர்களைத் தவிர மற்ற மக்களுக்கு மதம் என்பதாக ஒரு குறிப்பிட்ட கொள்கையோ கருத்தோ ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம்.

பொதுவாகச் சொல்லவேண்டுமானால் கிருஸ்தவர், இஸ்லாமியர் நீங்கின திராவிடர்களுக்கு மதம் என்கின்ற பெயரால் தங்களுக்குள் பல பிரிவாகப் பிரிந்து ஜாதி வகுப்புப் பேர்கள் சொல்லிக்கொண்டு ஒருவரை ஒருவர் இழிவாக நடத்துவதும், இழிவாகக் கருதுவதும் அதற்காக என்று ஏதோ ஒரு உயர்வு தாழ்வான பெயர்களைச் சொல்லிக கொள்ளுவதும் அதற்கென்று நடத்தையில் அர்த்தமற்ற வேஷத்தையும் குறிப்பையும் அணிந்து கொள்வதல்லாமல் வேறு பொதுவான கொள்கையோ காரியமோ கருத்தோ இருப்பதாகச் சொல்லுவதற்கு சரியான ஆதாரமோ அத்தாட்சியோ இல்லை என்றே சொல்லுவேன்.

இஸ்லாம், கிருஸ்தவர் அற்ற மக்களைப் பொதுவாக இந்துக்கள் என்று பெயரளவில் சொல்லுவதைத் தவிர அந்த இந்து என்பது சமூதாயப் பெயரா, இனப் பெயரா, மதப்பெயரா என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை. இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவும் இருக்க இடமில்லை. அரபு தேசத்தவனை அரப் அல்லது அரபு என்பது போலவும், ரஷ்யனை ரஷ்ஷி என்பது போலவும், ஒரு சிந்தியனை அதாவது சிந்து மாகாணத்தவனைச் சிந்தி அல்லது சிந்து என்பது போலவும், இந்திய நாட்டவனை அதாவது இந்தியனை இந்து என்று அழைக்கப்படுகிறது என்பதல்லாமல் இந்து என்கின்ற சொல்லில் மதச் சம்பந்தம் இருப்பதற்கு இடமே இல்லை அன்றியும் இந்து என்கின்ற சொல்லுக்கு ஆராய்ச்சியாளர்கள் பல கருத்து சொல்லுகிறார்களேதவிர மதம் என்பதில்லை. இந்து என்பது ஒரு மதத்திற்கு என்று சொல்லப்படுமானால் அதற்கு ஏதாவது ஆதாரமோ அல்லது மதச்சம்பந்தமான இலட்சணமோ இருந்திருக்கவேண்டும், அல்லது இருந்தாகவேண்டும். அந்த முறையில் இந்து மதம் என்பதற்கு எவ்விதமான மத இலட்சணமும் இல்லை. பௌத்த, கிருஸ்து, மகமது முதலிய மதங்களுக்கு மதக் கர்த்தாக்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவம் வைணவம் என்னும் மதங்களுக்குச் சிவன் விஷ்ணு என்ற மதக்கடவுள்கள் பெயர்கள் இருக்கின்றன. வைதிக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றிற்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மதக்கர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள்கள் பெயர் இல்லாமல் சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல் குறிப்பிடத்தகுந்த ஆதாரங்களுமில்லாமல் ஒரு மதம் இருக்கிறது என்றால் அதுதான் இந்துமதம் என்றால் இந்த இந்து என்கின்ற சொல் மதத்தைக் குறிக்கும் என்று யார்தான் ஒப்புக்கொள்ள முடியும்?

தவிரவும் இந்து மதம் என்கின்ற சொல் எந்த மத ஆதாரத்திலும் காணப்படுவதே இல்லை. இந்து மதத்தின் கொள்கை இன்னதென்று சொல்வதற்கும் ஆதாரங்கள் கிடையாது. சரியாகவோ, தப்பாகவோ, சூழ்ச்சியாகவோ, முட்டாள்தனமாகவோ ஏற்பட்டு பழக்கவழக்கத்தில் தந்திரசாலிகளுக்கு அநுகூலமாகவும், அறியாதபாமர மக்களுக்குக்கேடாயும், இழிவையும் தலையெடுக்க வசதி இல்லாததாயும் இருக்கிற ஒரு நடவடிக்கைக்கு இந்துமதம் என்ற பெயர் இருக்கிறது என்று சொல்லுவதற்கு அல்லாமல் வேறு என்ன பொருளில் என்ன பயனுக்கு இந்துமதம் இருக்கிறது என்று யாராவது சொல்லமுடியுமா? இந்து மதத்தால் மேன்மையும் பயனும் அடைகின்ற பிராமணர்கள் என்னும் பார்ப்பனர்கள் 'இந்துமதம் என்பதாக ஒரு மதம் கிடையாது, ஆரியர் கொள்கைகளும் பழக்க வழக்கங்களும்தான் இந்து மதம் என்பது ஆகையால் ஆரிய மதமே இந்துமதம்', என்று தைரியமாய்ச் சொல்லுகிறார்கள்.

மற்றொரு பார்ப்பன சகோர் "வேதமும் ஸ்மிருதிகளும் புராணங்களும்தான் இந்துமதம் என்பதோடு மனுதர்ம சாஸ்திரம்தான் இந்து மதத்திற்குச் சாஸ்திரம் (சட்டம்)" என்றும் சொல்லி அதை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்லு

வேண்டுமானால் வருணாச்சிரம தர்மம் என்பதாக ஒரு முறை இல்லாவிட்டால் மற்றபடி இந்துமதம் என்று சொல்ல இடம் இல்லை என்றே சொல்லலாம். அம்மதத்திற் கடவுளைப்பற்றிய கவலையோ நிர்ப்பந்தமோ கிடையாது என்பதோடு ஆச்சார அனுஷ்டான பழக்க வழக்க நடவடிக்கை பாவனை என்பவைகளுக்கும் எவ்வித நிர்ணயமோ, நிர்ப்பந்தமோ கிடையாது என்றும் சொல்லலாம்.

உதாரணமாக எதை வணங்குபவனும், எதை வணங்காதவனும் ஒரு கடவுள்காரனும்; பல கடவுள்காரனும், தானே கடவுள் என்கின்ற ஸ்மார்த்தனும் கடவுளே கிடையாது என்கின்ற நிரீச்சுரவாதியும் சுவர்க்க நரகம், பாபபுண்ணியம் இல்லை என்கின்ற லோகாயதவாதியும், எல்லாம் பொய் என்கின்ற மாயாவாதியும் ஆண் பெண் குறிகளை கடவுள் என்கின்ற சக்தி வாதியும் மற்றும் மத சம்பந்தமாய் எந்தவிதமான கொள்கை கொண்டவனும் (அதாவது தான் கிருஸ்தவனல்ல, மகமதியனுமல்ல என்று சொல்லிவிடுவானேயானால்) எவனும் இந்துவே ஆவான். அதனால்தான் நான் மேலே இஸ்லாம் கிருஸ்தவன் அல்லாத மக்களைக் குறிப்பிடும் சொல் இந்து என்ற சொல்லாக இருந்துவருகிறது என்று குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இந்து என்கிற பதம் இருக்கும் காரணத்தாலேயே நாட்டில் மதச்சண்டை நடக்கின்றது என்பதல்லாமல் மற்றபடி இந்த நாட்டில் இந்தியாவில் மதச்சண்டை ஏற்படச் சிறிதும் இடமே இல்லை. ஆகையாலேயே இந்துக்கள் என்றழைக்கப்படுகிற திராவிடமக்கள் இந்நாட்டின் நலங்கருதி நாட்டின் விடுதலையையும், மக்கள் சுயமரியாதையையும் கருதியும் பெரும்பாலான மக்களுக்குப் பிறவியின் காரணமாகவே சுமத்தப்பட்ட இழிவு ஒழிக்கப்படவேண்டும் என்பது கருதியும் முதலாவதாகச் செய்யப்படவேண்டிய வேலை இந்துமதம் என்கின்ற புரட்டை விலக்கி மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்தி அந்தச் சிறையிலிருந்து வெளியேறும்படி செய்வதேயாகும்.

இன்று இந்திய மனிதச் சமுதாயத்திற்குச் சிறப்பாகத் திராவிடநாட்டிற்கும், திராவிட சமுதாயத்திற்கும் இருந்துவரும் பெருநோய் இந்துமதம் என்பதேயாகும். இந்த இந்துமதம் என்ற பெருநோய் திராவிடர்களுக்கு க்ஷயரோகம் என்றும், குஷ்டரோகம் என்றும் உறுதியாய்ச் சொல்லலாம். இந்துமதம் இல்லாவிட்டால் 4ம், 5ம் சாதி (பிறவி) மக்களும், அவற்றால் ஏற்பட்டுவந்த வருகிற வரும்படியான கேடுகளும் இருக்க நடக்க ஏற்பட இடம் உண்டா என்று யோசித்துப்பார்க்க வேண்டுகிறேன்.

இப்படி நான் சொல்லுவதால்தான் இதைச் சுமார் 25வருட காலமாக முரட்டுத்தனமாக அச்சமின்றி பிரசாரம் செய்து வருவதால்தான் மத விரோதி, மதங்களை ஒழிப்பவன், கடவுள் விரோதி, கடவுள் இல்லை என்பவன் என்றெல்லாம் என்மீது பழி சுமத்துகிறார்கள். மற்றும் கடவுளும் இல்லை என்று ஒருவன் உண்மையாகவே சொல்லுவதனாலும் அதனால் உலகத்துக்கு எப்படிப்பட்ட கேடும் வந்துவிடாது. மதம் தோன்றியகாலம் முதல் மதப்போராட்டமும் கடவுள் கண்ட காலமுதல் கடவுள் மறுப்பும் நடந்துதான் வந்திருக்கின்றன. அதனால் உலகம் அழிந்து மறைந்து எங்கும் "நாத்திக"மும் பொதுவுடைமையும் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால் சில பித்தலாட்டங்கள் சில வஞ்சகங்கள் ஒரு அளவுக்காவது பலமற்று வருகிறது என்பது மாத்திரம் உண்மை. ஆதலால் ஏமாற்றுதலில் வஞ்சகத்தில் பிழைக்கும் மக்களுக்கு நம்மீது ஆத்திரம் வந்து அவர்கள் பாமர மக்களையும் மூடர்களையும் கிளப்பிவிட்டு நம் பிரசாரத்தை அடக்க வேண்டியவர்கள் ஆகிறார்கள்.

எனவே, [தொடரும்]

---

## திராவிடப் புரட்சிச் சின்னங்கள்

சுத்த வெள்ளி இனாமலில் டேஜ் ஜா[illegible]ன், கொடிகள், வட்டம், ஒவல், இரட்டை; ஒத்தையில் சின்னம் பொறிப்பது. இவைகளில் 6விதமும், கொஞ்சு பட்டன்கள் 4 விதமும், கப்பு பட்டன்களும் உண்டு தேவைக்கு,

N. R. சாமி Co.,
திராவிடப் புரட்சிச்
சின்னம் தயாரிப்போர்,
[illegible] மே. வீதி, காரைக்குடி

## திருவாதி ரேஞ்சு இசை வேளாளர் சங்கம்

16-2-47ல் திருவாதி ரேஞ்சு இசை வேளாளர் சங்க முதலாவது ஆண்டுவிழா நடைபெற்றது. தவில் வித்வான் தோழர் என். டி. மீனாட்சி சுந்தரம் விழாவைத் தொடங்கிவைத்தார். நாதஸ்வர வித்வான் தோழர் ஏ. ஆர். எஸ். என். சுப்பிரமணியம் தலைமை வகித்தார். பிடில் வித்வான் கோவிந்தசாமி நாதஸ்வர வித்துவான ஏ. கே. எஸ். நடராசன், நாதஸ்வர வித்வான் வேணுகோபால், பி. எஸ். வெங்கிடகிருஷ்ணன், என். எஸ். மணி ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றியபின் து. மா. குப்புசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

## ஷெடியூல்டு பள்ளர் உழவர் வாலிபர் சங்கம்

13-2-47ல் நாமக்கல் தாலுக்காவைச் சேர்ந்த தூசூரில் ஷெ சங்கத்தின் முதல்வாரக் கூட்டம் தோழர் பி. கருப்பண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் வி. எம். பழனிவேல் முதலிய பல தோழர்களால் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன' என்று தோழர் வே. சுந்தரராசன் அறிவிக்கிறார்.

---

## விற்பனைக்குத் தயார்!

எங்களிடம் 'குடி அரசு' பத்திரிகைகளை ஒவ்வொரு வருடமும் தனித்தனியாக பைண்டு செய்து, அதாவது 4வது வருடம் முதல் 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 15, 17, 18, 19வது வருடம் வரையில் உள்ள வால்யூம்கள் விற்பனைக்குத் தயாரில் இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலை ரூ. 7-8-0 சொற்ப வால்யூம்களே கைவசம் இருப்பதால், பாதிதொகை முன்பணத்துடன் தேவைக்கு ஆர்டர் கொடுக்கவும் வால்யூம்களை இரயில்வே பார்சல் மூலம் பெற்றுக்கொள்ள வசதி உள்ளவர்களுக்கு செலவு குறையும்.

குறிப்பு:- 16வது வருட குடி அரசு பைண்டு வால்யூம் மட்டும் நான்கு மாதங்கள் கொண்டதாக இருப்பதால் அதன் விலை ரூ 3-0-0.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

## ஈரோடு நகர திராவிடர் கழகத் தேர்தல்

19-2-47ல் ஈரோட்டிலுள்ள கோவை மாவட்ட திராவிடர் கழகக் கட்டிடத்தில் ஈரோடு நகர திராவிடர் கழகத் தேர்தல் கோவை மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எஸ் ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்காணும் தோழர்கள் ஏகமனதாய் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: ஈ. வி. பழனியப்பன்.
உபதலைவர்: ஆர். டி. எல்ல நாயகம்.
செயலாளர்கள்:- ஆர். ஆராதுசாமி எஸ். அப்பாவு.
பொருளாளர்: ஈ. எம். நமசிவாயம்
அமைப்பாளர்: ஈ. கே. கருப்பையா
க. ச. ப. கேப்டன்: ஆர். பெருமாள்
மற்றும் 14பேர் செயற்குழுவினர்.

கீழ்க்காணும் தோழர்கள் ஈரோடு நகர திராவிடர் கழக கிளைக்கமிட்டி நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: பி. சண்முகவேலாயுதம்
செயலாளர்: எஸ். அப்பாவு
செயற்குழுவினர்.-
ஆர். பாலசுப்பிரமணியம்,
வெங்கடாசலம்
ஆர். நாராயணசாமி

## ஸ்ரீ சௌடேஸ்வரி பப்ளிகேஷன் லிமிட்டெட்

24-2-47ல் காலை 5-30 மணிக்கு கோவை ஆர். எஸ். புரத்தில் ஸ்ரீ சௌடேஸ்வரி பப்ளிகேஷன் லிமிட்டட் திறப்புவிழா நடைபெறும் என்று தோழர் எம். கே. கோபால் அறிவிக்கிறார்.

## திருத்தம்

15-2-47 குடியரசு இதழில் 8ம் பக்கம், 3ம் பத்தியில் வாழ்க்கை ஒப்பந்தம் என்ற தலைப்பில் "2-2-47 காட்டூரில் (திருவாரங்கூர்)" என்றிருப்பதை "2-2-47ல் காட்டூரில் (திருவாரூர்)" என்று வாசித்துக்கொள்ளவும்.

## வ. உ. சி. படிப்பகம்

6-2-47 காலை 10 மணிக்குத் திருமலைராயன் பட்டினத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் அவர்களின் நினைவாக 'வ. உ. சி. படிப்பகம்' தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் திறக்கப்பட்டது. தோழர் இரா க. நாகராசன் அவர்களால் வ உ சி உருவப்படமும், தோழர் ச. அய்யாக்கண்ணு அவர்களால் புரட்சிக்கவி பாரதிதாசன் உருவப்படமும் திறக்கப்பட்டன. விழாவிற்குத் தோழர் செ. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

அன்று மாலை 6 மணிக்குத் தோழர் செ. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் நாகை என். பி. காளியப்பன் அவர்கள் வ. உ. சி. அவர்களைப்பற்றி விளக்கமாகப் பேசினார். கூட்டத்திற்குச் சுமார் 6000 பேர் வந்திருந்தனர்.

### வ. உ. சி. உருவப்படம்

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் அவர்களின் அழகிய உருவப்படம் வைத்திருக்கிறோம்.

அதன் விலை 5 அணாதான்.

கிடைக்குமிடம்:

அ. ராசகோபால்,
செயலாளர், வ. உ. சி. படிப்பகம்,
திருமலைராயன்பட்டினம்.

## திராவிட மாணவர் கழகம்

திருவத்திபுரத்திற்கு அடுத்த ஒரு ........ புதுப்பேட்டையில் 13-2-47ல் திராவிட மாணவர் கழகம் திறக்கப்பட்டது. தோழர் தி. பொன்னுசாமி தலைமையில் தோழர்கள் வ. ஆதிமூலம் தலைவராகவும், தி. பொன்னம்பலம் செயலாளராகவும், அ. ராச மாணிக்கம் பொருளாளராகவும் மற்றும் 7பேர்கள் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## அனுதாபம்

காயல்பட்டணம் (........) திராவிட கழகச் செயலாளர் தோழர் சதாசிவன் அவர்களின் ........ இயற்கை எய்தியது குறித்து நாம் வருந்துவதுடன் எமது அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## இயக்கச் செய்திகள்

9-2-47ல் செங்கல்பட்டூர் திராவிடர் கழகச சார்பில் சனிச்சந்தையடியில் மாலை 6 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

o o

விழுப்புரத்தில் 16-2-47ல் தோழர் கோவிந்தராஜுலு அவர்கள் தலைமையில் "பகுத்தறிவு படிப்பக"த் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் கோவிந்தராஜுலு படிப்படிகத்தைத் திறந்துவைத்தார். டணுகு சட்டநாதன், டி. ஆறுமுகம் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் கோவிந்தராசலு தலைவராகவும், சத்தார் உபதலைவராகவும், சுப்பிரமணியன் செயலாளராகவும், சிவானந்தம் உதவிச் செயலாளராகவும், முருகேசன் பொருளாளராகவும், 7-செயற் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

சாத்தூர் வட்டாரம் புதுப்பட்டியில் திராவிடர் கழகத் தொடக்கவிழா 16-2-47ல் ஜனாப் சாஜியக் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பி. இராஜமணி, மைக்கேல் ஆகிய தோழர்கள் பேசினார்கள்.

o o

15-2-47ல் திருக்கழுக்குன்றம் திராவிட கழகத் திறப்புவிழா தோழர் அப்பாவு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. குமாரவேலு தலைவராகவும், ச. விஜயகோபால் உபதலைவராகவும், அழகு சுந்தரம் செயலாளராகவும், ஆறுமுகம் உபசெயலாளராகவும், சபாபதி பொருளாளராகவும், 9 உறுப்பினர்களும் நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் பாலசுப்பிரமணியம், கணபதி ஆகியோர் பேசினார்கள்.

o o

செம்பாக்கம் திராவிடர் கழகத்தின் சார்பில் 16-2-47 இரவு 8 மணிக்குத் தோழர் செ. மா. வடிவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், செ. கு. திருநாவுக்கரசு, செ. நடராசன், சொக்கலிங்கம், வீரபத்திரன், சியாமளம், புலவர் பு. செல்வராஜ் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

குடி அரசு

1947 ஃபிப்ரவரிமீ 22உ

## காந்தியாரும் "ஜாதி ஒழிய வேண்டும்" என்கிறார்

எல்லோரும் சமதர்மம், பொதுவுடைமை பேசிப் பாமர மக்களிடம் செல்வாக்குப் பெறுகிறார்களே என்று காந்தியாரும் சமரசம்பேசத் துணிந்துவிட்டார். ஏனெனில் இந்தக் காலம் சமதர்மப் பேச்சுக் காலமாக இருந்துவருகிறது. இன்று "கடவுள்" முதல் எந்த மகான், அரசியல்வாதி, முதலாளி ஆகிய எவரும் சமதர்மப் பேச்சினாலேயே வாழ முடிகிறது. கடவுள் ஒரு 'சமதர்ம'க்கொள்கையுடையது என்பதினால்தான் அது மதிக்கப்படுகிறது அதனால்தான் அது சர்வவல்லமையுடையது என்று சொல்லப்பட்டாலும் மக்கள் அதை மதிக்கிறார்கள். ஆனால் அந்த வார்த்தைக்கு இருக்கும் செல்வாக்குக் காரணமாக மக்களுக்குள் இருந்துவரும் துக்கம், வறுமை, பொய், பித்தலாட்டம், அயோக்கியத்தனம், வஞ்சகம் முதலாகியவைகளைப் பற்றியும், நோய், கொலை, கொள்ளை முதலியவைகளைப் பற்றியும் சிந்தித்துப் பார்த்த "இதற்கு யார் பொறுப்பாளி சர்வ வல்லமை உடைய கடவுள் இந்தக் காரியங்களுக்கு மாத்திரம்சக்தியற்றவராகவோ, பொறுப்பாளி யல்லாதவராகவோ எப்படி இருக்கமுடியும்? கடவுள் என்பதே பொய்யோ, அல்லது அவர் சர்வ வல்லமை உடையவர் என்பது பொய்யோ, அல்லது நாம் ஏமாற்றப் பட்டுவிட்டோமோ, அல்லது நமக்குத்தான் புத்தி இல்லையோ" என்று தங்களுக்குள்ளாகவே கேள்வி கேட்டு எவரும் உண்மை அறிவதில்லை.

அதுபோல்தான் காந்தியாரும் செல்வாக்குள்ள சில வார்த்தைகளைச் சொல்லிவிடுவதால், அதாவது, சத்தியம், அஹிம்சை, நீதி, சமாதானம் என்ற வார்த்தைகளைச் சொல்லுவதன் மூலமும், அது கெட்டிக்காரத்தனமாய் விளம்பரம் செய்யப்படுவதன் மூலமும் இந்திய அரசியலில் செல்வாக்கு ஏற்பட்டுவிட்டதால் அவர் நடத்தையின் பயனாய் நாட்டில் அரசியல்துறையில் ஏற்படும் பொய் பித்தலாட்ட நாணயக் குறைவான காரியங்களுக்கும் ஏமாற்று வஞ்சகங்களுக்கும், அடிதடி, கொலை கொள்ளை, நாசவேலைகளுக்கும் மற்றும் அட்டூழியங்களுக்கும் சமாதானக் கேடான குழப்பங்களுக்கும் அவர் சிறிதும் சம்பந்தப்படாதவராய் பொறுப்பு ஏற்கப்படவேண்டாதவராய்த் தப்பித்துக்கொள்ளுகிறார்.

இதுபோலவே சில செல்வாக்குள்ள வேஷம் பதவி ஆகியவைகளாலும் தாங்கள் எவ்வளவு அயோக்கியத்தனம் அட்டூழியம் செய்தாலும் பல சாமியார்களும், குருமார்களும், பண்டாரசன்னதிகளும், மடாதிபதிகளும், ஆச்சாரியார்களும், மதிக்கப்படத்தக்கவர்களாகவும் பூஜிக்கப்படத்தக்கவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

அதுபோலவே அரசியலிலும் சில செல்வாக்கு பெற்ற சொற்களை அதாவது சுதந்தரம் சுயராஜ்யம், சுயேச்சை, முதலாளி கொள்ளை, ஏகாதிபத்திய எதேச்சாதிகாரம், பாரதமாதா என்பன போன்ற வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் எப்படிப்பட்ட அயோக்கியனும் பாடுபடாமல் வாழத்தக்கவனாக ஆகிவிடுகிறான். திருநீறு, நாமம், காவி, ருத்திராட்சம் முதலியன அணிவதினாலும் மகாமகா அயோக்கியர்களும் மதிக்கத்தக்கவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

எனவே பித்தலாட்டத்திற்கும் நாணயக் குறைவிற்கும் ஒழுக்கக் கேட்டிற்கும், வஞ்சக வாழ்விற்கும் செல்வாக்கு பெற்ற சொற்கள் இடமளித்துப் பாதுகாப்பளிக்கின்றன.

இதன் தன்மையையும் பயனையும் நன்றாய் அறிந்து அநுபவித்துவரும் காந்தியார் இப்போது ஜாதிகள் ஒழியவேண்டுமென்றும், ஏழையும் பணக்காரனும் ஒழியவேண்டும் என்றும் சொல்லி அந்த செல்வாக்கு வார்த்தைகளால் ஏற்படக்கூடிய பயனும் அடையவேண்டுமென்று ஆசைப்பட்டுத் துணிந்து அந்தச் சொற்களைச் சொல்லிவிட்டார்.

அதாவது காந்தியார் தன்னைக்காண வந்த ஒரு 'தாழ்ந்த" ஜாதியார் கூட்டத்தாரிடம் பேசுகையில்,

"இந்துமதம் சாகாமல் இருக்கவேண்டுமானால் ஜாதிகளை எல்லாம் ஒழித்துவிட வேண்டும்"

என்று பேசியிருப்பதாக "அரிஜன்" என்கின்ற பத்திரிகையில் காணப்படுகிறது. இதைப் பத்திரிகைகள் எல்லாம் விளம்பரப்படுத்திக் காந்தியார் சமுதாயத்தில் சமதர்மம் பேசிவிட்டார் என்று மக்கள் கருதும்படிச் செய்கின்றன.

காந்தியார் ஜாதிகள் ஒழியவேண்டுமென்று சொன்னது எதற்காக என்பதைக் காட்ட அந்தவாக்கியத்திலேயே தெளிவுபடுத்தி இருக்கிறார். அதாவது "இந்துமதம் உயிர் வாழவேண்டுமானால் ஜாதிகள் ஒழியவேண்டும்" என்று அவர் சொல்லி இருப்பதால் இந்துமதத்தைக் காப்பாற்றுவதற்காகவே அவர்

அப்படிச்சொன்னார் என்பது விளங்கும்.

முதலாவதாக இந்துமதம் என்றால் என்ன என்பதை நிர்ணயிக்க காந்தியார் அதிகாரியா? தகுதியானவரா? அல்லது இந்துமத சாஸ்திரங்கள், இந்துமத தர்மங்கள், இந்துமத கடவுள்கள், அவற்றின் வாக்கு, செய்கை, ரிஷிகள் கருத்து, மனுக்களின் சட்டம் ஆகியவை அதிகாரிகளா? தகுதியானவர்களா? என்பதை அறிவுள்ள மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தாற்போல் காந்தியார் இந்த விஷயத்தில் தந்திரமில்லாமல், முரண் இல்லாமல் தெளிவான வழியில் நேராய் நடந்துகொள்ளுகிறாரா என்பதையும் அறிவாளிகள் சிந்திக்கவேண்டும்.

முதலாவது இந்து மதத்திற்கு ஆதரவு மனுதர்ம சாஸ்திரமும், வேதத்தை அடிப்படையாய்க் கொண்ட புராண இதிகாசங்களும், கடவுள் ரிஷிகள் வாக்குகள் முதலியவைகளுமேயாகும் என்பதை எந்த இந்துவும் மறுக்கமாட்டார். இப்படி இருக்க இவைகளை மாற்ற காந்தியாருக்கு என்ன அதிகாரம்? காந்தியார் இந்துமதத்தின்படிச் சூத்திரரேயாவார். சூத்திருக்கு இந்தப் பேச்சுக்கள் பேச உரிமை உண்டா? ஏதோ பார்ப்பனர் ஆதிக்கக் காவநிலை சுயமரியாதைக்காரர்களால் சிறிது கெட்டுவிட்டதால் பார்ப்பனர்கள் தற்கால சாந்தியாகக் காந்தியாரை விபீஷணராகக் கையாளுகிறார் என்பதல்லாமல் அவர் இதெல்லாம் பேச எப்படி அதிகாரியாவாரா? இவர் சொல்லுவதை சங்கராச்சாரிகள், சாஸ்திரிகள், வைணவ மடாதிபதிகள் ஸ்மார்த்த, மாத்துவ, முதலிய அதிகாரம்பெற்ற மத மடாதிபதிகள் ஒப்புக்கொள்ளுவார்களா? மக்கள் மத விஷயத்தில் அபிப்பிராயம் சொல்ல இவர்களைத்தான் மரியாதை செய்வார்களா அன்றி, காந்தியாரை மரியாதை செய்வார்களா?

இந்து மதத்தின் ஒரு சிறு வேர்க்கொடி மீதி இருந்தாலும் ஈளைக்கு இந்துமத மக்கள் மீது சாஸ்திரங்களும், சாஸ்திரிகளும்தான் ஆட்சி, ஆதிக்கம் செலுத்துவதேயன்றி காந்தியார் சொல்லுக்கு என்ன மரியாதை, மதிப்பு, விலை இருக்கமுடியும்? இதை காந்தியார் தெரியாதவர் என்று யாரும் சொல்லிவிட முடியாது. ஆகலால் காந்தியார் சொல்லுவதில் தந்திரமும் முரணும் இல்லாத நாணயம் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அது செல்லுபடி அற்றது என்றே சொல்லுவோம்.

இந்தச் செல்லுபடி அற்ற தன்மையிலாவது காந்தியார் தந்திரமில்லாமல் பேசி இருக்கிறாரா என்பதைக் கவனிப்போம். என்னவென்றால் காந்தியார் சொல்லும் ஜாதி ஒழிப்பு என்பது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவையான ஜாதிகளை அல்ல என்றும், உயர்வு தாழ்வு பாராட்டும் உள் ஜாதிகளைப் பற்றித்தான் சொல்லுகிறார் என்பதையும் வாசகர்கள் உணரவேண்டும்.

அவர் சென்றவாரம் ஜாதி ஒழிப்புபற்றிக் கபிலதலி என்ற இடத்தில் பேசி இருக்கிறதாகப் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது.

அதாவது "ஜாதி இந்துக்கள் மணிபுரி (ஜாதியார் என்னும் தாழ்ந்த) ஜாதியாரைத் தங்கள் ஓட்டு பலத்திற்காகத் தங்களில் ஒரு பகுதியார் என்று எண்ணினாலும் அவர்களது நலனை ஜாதி இந்துக்கள் கவனிக்கவில்லை"

என்று சொல்லிவிட்டு,

"இந்துமதம் சாகாமல் இருக்கவேண்டுமானால் ஜாதிகளை எல்லாம் ஒழித்துவிடவேண்டும்" என்கிறார்.

மற்றும் தன்னைப்பற்றி "நான் எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்பதை மறந்தேவிட்டேன்" என்கிறார்.

அதற்கும் கீழ் "இயற்கைக்கு விரோதமான பிரிவுகளில் எனக்கு நம்பிக்கை கிடையாது" என்கிறார்.

அதற்கும் கீழ் "ஜாதி இந்துக்கள் என்பதற்குப் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என்று பொருள் கூறப்படுமானால் இந்த மூன்று ஜாதியாரும் பிரிட்டிஷார் வெளியேறி சுதந்திரம் ஏற்பட்ட காலத்தில் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்ளமுடியாதபடி ஒழிந்து போவார்கள். ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் காணப்படமாட்டா, ஒடுக்கப்பட்ட ஜாதியார் தங்கள் உரிமையைப் பெற்றுவிடுவார்கள்" என்று பேசி இருக்கிறார். (இது 16-2-47 "அரிஜன்" பத்திரிகையில் இருக்கிறது.)

எனவே இந்த வாக்கியங்களின்படி ஜாதி வித்தியாசங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்பதும், ஜாதி என்பதும், உள் ஜாதிகளே தவிர வர்ணங்கள், வருண முறைகள் அல்ல என்பதும் நன்றாய் விளங்குகின்றனவா இல்லையா என்று கேட்கிறோம். ஜாதிகளில் நம்பிக்கை இல்லை என்பதில் இயற்கை அல்லாத அதாவது செயற்கை ஜாதி பிரிவுகளில் நம்பிக்கை இல்லை என்றால் காந்தியாரைப் பொறுத்தவரை இயற்கைக்கு விரோதம் அதாவது செயற்கை ஜாதி என்பது வருண முறை அல்லாத உள் ஜாதிகளைத்தான் குறிப்பிடுகிறார். ஏனெனில் வருணமுறை இயற்கையாய் ஏற்பட்டது என்பதை அவர் பல சமயம் சுட்டிக்காட்டி இருக்கிறார். அதை எப்பாடுபட்டாவது காப்பாற்ற

வேண்டும் என்றும் பிராமணன் முதலிய வர்ணம் பிறவியிலேயே ஏற்பட்டதென்றும் பல தடவை குறிப்பிட்டு இருக்கிறார்.

அன்றியும் ஜாதி இந்துக்கள் என்பதில் சூத்திரர்கள் என்பவர்களும் பெரும்பாலோர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

அன்றியும் ஜாதி இந்துக்கள் என்பது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என்ற கருத்திலேயே அப்படிக் "கூறப்படுமானால் மனித சமுதாயத்தில் இவர்கள் மிகச் சிறுபான்மையாராவார்கள் ஆதலால் சுதந்திர இந்தியாவில் இவர்கள் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்ள தகுதி அற்றவர்களாகப் போய் விடுவார்கள். அப்போது (இந்த, ஜாதிவித்தியாசம் காணப்படமாட்டா என்றும் அந்தக் காணப்படாதத்தன்மை எப்படி இருக்கும் என்றால் "ஒடுக்கப்பட்ட ஜாதியார் தங்கள் உரிமைகளைப் பெற்றுவிடுவார்கள்" என்றும் சொல்லி முடிக்கிறார்.

ஆதலால் காந்தியார் கூறும் ஜாதி என்பது உள்ஜாதி தானே ஒழிய வர்ணமுறை ஜாதி அல்ல என்றே சொல்லுவோம்.

எதுபோல் என்றால் கோவிலுக்குள் ஆதிதிராவிடர்கள் செல்லுவதால் உள் ஜாதிகள் ஒன்றாகக் கருதப்படுகிறது என்பதல்லாமல் அங்கு வருண முறை, அதாவது பிராமணத் தன்மை சிறிதும் எப்படி மாற்றமடையவில்லையோ அதுபோல் வருணப்பிரிவு சிறிதும் அழிக்கப்படவே இல்லை என்போம்.

தவிரவும் காந்தியார் நவகாளியில் 12-2-47ல் தனது பிரார்த்தனையின்போது என்ன சொல்லுகிறார் என்றால்,

'தீண்டாமை என்பது உண்மையாக ஒழிந்துவிடுமானால் ஜாதி என்பதே இருக்காது" ஜாதி முறை ஒரு உயர்ந்த அந்தஸ்தான— பழக்கவழக்கமாக

## திராவிடர் கழகநிதி அளிப்புக்கூட்டம்

2-2-47 ஞாயிறு மாலை 6மணிக்குத் திருச்சி டவுன் ஹால்முன் நடைபெறும்.

**தலைவர்:**

தி. போ. வேதாசலம் பி. ஏ.

சொற்பொழிவாளர்கள்: பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள்.

அனைவரும் வருக!

எ. சின்னதுரை, தலைவர்
எம். நடராசன், ஆர். சுலைமான்,
செயலாளர்கள்.
திருச்சி மாவட்ட திராவிடர்,
கழகம்

இருக்குமானால் தீண்டப்படாத (கீழ் ஜாதி) மக்கள் தாங்களும் அந்தஸ்து வேண்டுமென்று இயற்கையாக விரும்புவார்கள். ஆனால் அது முடியாததாக இருக்கும். ஆதலால் அந்தப் போராட்டம் இல்லாமல் இருக்கவேண்டும். அது உள்ளவரையில் தீண்டப்படாதமக்கள் வேறாகத்தானிருப்பார்கள். ஆதலால் (அந்த மாதிரி) ஜாதிகள் ஒழிந்துவிட்டால் எல்லோரும் இந்துக்களாக இருப்பார்கள். ஆதலால் தீண்டப்படாத மக்கள் தங்களுக்குள் இருக்கும் உள்ஜாதிகளை ஒழித்துக்கொண்டு சுத்தமாக இருப்பதன் மூலம் ஜாதி இந்துக்களுக்குள் கலந்துவிடவேண்டும்" என்று சொல்லி இருக்கிறார் (இது 15-2-47 'இந்தியன் எக்ஸ்பிரசில் காணப்படுவதாகும்) இதிலும் காந்தியார் ஜாதி என்பதை வருணம் என்பதாகக் கருதவில்லை என்பதோடு சூத்திரர்கள் என்பவர்கள் தங்களுக்குள் ஒரு ஜாதி ஆகவேண்டும் என்றும், உள் பிரிவுகள் ஒழிய வேண்டும்- என்றும் வருண முறையிலும் தீண்டாமை இருக்கக்கூடாது எனவும்தான் கருத்துக்கொண்டு பேசியிருக்கிறாரே ஒழிய வர்ணம் ஒழிய வேண்டும் என்று சொல்லவில்லை.

ஆதலால் காந்தியார் சொல்லும் செயற்கை ஜாதி பேதங்கள் இப்போது தானாகவே அல்லது சுயமரியாதைக்காரர்கள் தொண்டால் ஒழிந்துகொண்டுதான் வருகின்றன. இதற்குக் காந்தியார் முயற்சி சிறிதும் தேவை இல்லை என்போம்.

அன்றியும் காந்தியாருங்கூட வேறு யாராவது ஏதாவது சமுதாயத்தில் மாற்றம் செய்து வைத்திருந்தால் பிறகு அதில் தான் வந்து புகுந்து பெருமை சம்பாதித்துக்கொள்வதைத் தவிர அவராகச் செய்ததாக இதுவரை சமுதாயத் துறையில் ஒன்றுகூடக் காணமுடியாது என்று ஆதாரத்தோடு சொல்லுவோம்.

எடுத்துக்காட்டாக,

1. தீண்டப்படாத மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிக்கு 1922ல் காந்தியார் தனிக் கிணறு வெட்டிக்கொடுக்கக் காங்கிரஸ் கமிட்டியின் மூலம் பணம் உதவி செய்து கிணறு வெட்டச் சொன்னார்.

ஜஸ்டிஸ் கட்சியார் பொதுக் கிணற்றில் யாவரும் (ஆதித்திராவிடருட்பட) தண்ணீர் எடுத்துக்கொள்ள உரிமை உண்டு, தடுத்தால் அபராதம் என்று சட்டம் செய்தார்கள். அதனால்தான் அந்த உரிமை ஏற்பட்டது.

2. தீண்டப்படாத மக்களுக்குத் தனிக் கோவில்கட்டிக் கொடுக்க காந்தியார் திட்டம் போட்டார்.

சுயமரியாதைக்காரர்கள் அதை எதிர்த்து இப்போது உள்ள கோவிலுக்குள்ளேயே அவர்கள் போகவேண்டுமே ஒழிய தனிக்கோவில் கட்டக் கூடாதென்றார்கள். அதனால் தான் இதே கோவிலுக்குள் புக முடிந்தது.

அதற்கப்புறம்,

3. காந்தியார் தீண்டப்படாத மக்கள் வேண்டுமானால் "சூத்திரர்கள்" செல்லுமிடம் வரையில் கோவிலுக்குள் போகலாம் என்றார்.

சுயமரியாதைக்காரர்கள் அது கூடாது, கோவிலுக்குள் பார்ப்பனர் உள்பட எல்லோருக்கும் ஒரே இடம் இருக்க வேண்டும் என்றார்கள்.

4. பிறகு காந்தியார் அதை ஒப்புக்கொண்டு கோவிலுக்குள் தடை கட்டும் தந்திரம் செய்தார்.

அதை சுயமரியாதைக்காரர்கள் எதிர்த்தவுடன் கர்ப்பக்கிரகத்தை பிராமணருக்கு மாத்திரம் உரிமை என்று வைத்து விட்டால் போதும், ஜாதி உயர்வுக்கு ஒரு அடையாளமாகிவிடும் என்ற அளவுக்கு வந்தார்.

5. இப்போது அதையும் சு. ம. காரர்கள் எதிர்க்கிறார்கள்.

இதற்குக் காந்தியார் என்ன சொல்லுவாரோ தெரியவில்லை

6. சமபந்தி சாப்பாடு, கலப்பு மணம் விஷயமாகக் காந்தியார் சுமார் 1927, 28ம் ஆண்டில் இங்கு வந்திருந்தபோதும், வங்காளத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போதும் மாறுபாடாகவும் எதிர்ப்பாகவும் பேசியவர் என்றும் தாராளமாய் அவை அமுலுக்கு வந்தபிறகு இப்போது மறுத்துப்பேசாமல் அனுமதிக்கிற அளவுக்கு இசைவு காட்டுவதாக இருந்து வருகிறார். இப்படியாக அநேக மாறுதல்களை எதிர்த்து தோல்வி அடைந்த பிறகே சம்மதிக்கிறவராகவும், ஆதரிக்கிறதாகவும் காட்டிக்கொண்டு வருகிறார்.

இவ்வளவுதூரம் காந்தியார் சமுதாயத்துறையில் இறங்கி வந்ததற்குக் காரணம் சுயமரியாதைக்காரர்கள் "இந்து மதம் என்பது பித்தலாட்டம்" என்றும், "மக்கள்பிறவி இழிவு என்பவை நீங்க வேண்டுமானால் வருணாச்சிரமம் ஒழியவேண்டும் அல்லது மக்கள் இஸ்லாமாக மாறி ஆகவேண்டும்" என்றும் பெரிய போடு போட்டு அநேக எதிர்ப்புகளைச் சமாளித்துத் தமிழ்நாட்டில் சுமார் 10 ஆயிரம் மக்கள் வரை இந்த 10வருடத்தில் இஸ்லாமாக மதம் மாறியதே யாகும். இப்போதும் காந்தியாருக்கு இந்த அளவுக்காவது திடீரென்று ஞானம் பிறந்ததற்குக் காரணம் பாக்கிஸ்தான் கிளர்ச்சியில் முஸ்லிம்களை எதிர்க்க படை சேர்க்க வேண்டும் என்கின்ற உள் எண்ணமில்லாமல் வேறு காரணம் ஒன்றும் இல்லை என்று உறுதியாகச் சொல்லுவோம். இவரது வார்தா திட்ட கல்வி என்பதே வருணாசிரமமும் உள் ஜாதிப் பிரிவும் காப்பாற்றப்படுவது என்பதை எந்த அறிவாளியும் மறுக்க முடியாது.

ஆகவே இந்த விஷயத்தில் ஏதாவது சிறு சந்தேகம் இருப்பவர்களும் நாம் சொல்லுவதை சரியா தப்பா என்று உணர வேண்டுமானால் இப்போதே காந்தியாருக்குத் தந்தி அடித்து அதாவது,

"தாங்கள் சமீபத்தில்சொன்ன ஜாதி ஒழிப்பு என்பது வருண முறையாகிய பிராமணன் முதலிய 4 ஜாதியும் ஒழிந்து ஒன்றாவதா அல்லது அவை அப்படியே இருக்க உள் ஜாதிகள் (பிரிவுகள்) ஒழிவதா" என்றுகேட்டால் அதன் வண்டவாளம் விளங்கிவிடும்.

ஆதலால் திராவிட காங்கரஸ் இளைஞர்கள் காந்தியாரின் இந்தப் பழய கருத்துக்களைப் புதுவார்த்தைகளால் வெளியிடும் தந்திரத்தைக்கண்டு ஏமாந்து விடவேண்டாம் என்றும், இந்து மதம் ஒழிந்தாலொழிய அல்லது நாம் இந்து மதத்திலிருந்து வெளிப்பட்டால் ஒழிய சூத்திரப்பட்டம், திராவிடருக்கு ஒழியாது என்றும், முஸ்லிம்களுக்கு விரோதமாய் ஆரியர் சேர்க்கும் படை வலையில் விழுந்துவிடக்கூடாது என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## கோவை மாவட்ட திராவிடர் கழகம்

நடைபெறும் 1947ம் ஆண்டிற்குக் கோவை மாவட்டத்தின் எல்லா ஊர்களிலுமுள்ள கிளைக் கழகங்களில் தேர்தல்கள் நடத்திப் புத்தாண்டிற்கு நிர்வாகிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புமாறு கழக உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி வசூலைத் துரிதப்படுத்தி விரைவில் நமது மாவட்ட 'கோட்டா'வைப் பூர்த்தி செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

எஸ். ஆர். சந்தானம்,
பொதுச்செயலாளர்,
கோவை மாவட்ட திராவிடர் கழகம்,
ஈரோடு.

## பெங்களூர் மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்

2-3-47 ஞாயிறு மாலை 6மணிக்குப் பெங்களூர் மாவட்ட நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் பெங்களூர் தண்டு ஆர்க்காடு நாராயணசாமி சத்திரத்தில் நடைபெறும். அப்போது பெங்களூர் மாவட்ட திராவிடர் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பெங்களூர் மாவட்டத்திலுள்ள எல்லா திராவிட கழகங்களைச் சேர்ந்த நிர்வாகிகளும் அங்கத்தினர்களும் இதையே அழைப்பாகக்கொண்டு கமிட்டிக்கூட்டத்திற்கு வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

வெ. நாராயணசாமி,
அ. கொண்டையரசன்
செயலாளர்கள்,
பெங்களூர் மாவட்ட திராவிடர்கழகம்,
123, கேவலிரோடு, பெங்களூர்.

(Cont)

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

27-1-47 திங்கட்கிழமை காலை 6-மணிக்குத் திருச்சியில் திருச்சி Y. M D A. பொருளாளர் தோழர் இரா. தீனதயாளு அவர்களும், மாயவரம் தோழர் டாக்டர் ஆர். வரதராஜுலு அவர்களின் மகள் தோழியர் இராஜலட்சுமி அவர்களும் மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். திருமணம் மூன்றே நிமிடத்தில் எவ்வகைச் சடங்குமின்றி இனிது நடைபெற்றது. அதுசமயம் திருச்சி வரகனேரி தியாகராயர் திராவிடர் கழகத்தாரும், புதுவைத் தோழர் சி. இராமலிங்கம் அவர்களும், திருச்சி தோழர் கனகநாதன் அவர்களும் வாழ்த்திதழ் வாசித்து மணமக்களுக்களித்தனர். பல புத்தகங்கள் மணமக்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டன. பல தோழர்கள் மணமக்களுக்குத் தந்தி வாயிலாகவும், கடிதங்களின் வாயிலாகவும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர். திருமணத்தின் நினைவாகக் குடியரசு, விடுதலை, ஜஸ்டிசைட் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத் தனித்தனியே ஐந்து ஐந்து ரூபாயும் மத்திய திராவிடர் கழகத்திற்கு 11 ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

### நன்றி

எங்கள் திருமணத்தின்போது நேரில் வந்திருந்து எங்களை வாழ்த்திய திராவிடர்கழகத் தோழர்களுக்கும், கடிதங்கள் மூலமாகவும், தந்திகள் வாயிலாகவும் வாழ்த்திய உள்ளூர் வெளியூர் தோழர்களுக்கும் எங்கள் நன்றியறிதலை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களன்புள்ள,
மணமக்கள்:- இரா. தீனதயாளு,
இராஜலெட்சுமி.

o o

7-2-47ல் மணக்காலில் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் ஜீவானந்தம் — பத்மாவதி அம்மாள் திருமணம் மணமக்கள் இல்லத்தில் நடைபெற்றதின் நினைவாகக் குடியரசு, திராவிடநாடு, திராவிடமணி, விடுதலை ஆகியவற்றிற்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

9-2-47ல் கோவில்பட்டி இலுப்பையூரணியில் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதன் நினைவாகக் குடியரசுக்கு 15½ அணாவும், விடுதலைக்கு ஒரு ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

சென்னைக்கடுத்த ரெட்ஹில்ஸ் நகரில் தோழியர் இராச இலக்குமிக்கும், தோழர் மு. சுப்பிரமணியத்திற்கும் 9-2-47 காலை 9 மணிக்குச் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சில முக்கியஸ்தர்கள் உள்பட ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர். திருமணத்திற்கு ஆசிரியர் மயிலை சிவமுத்து தலைமைவகித்தார். தோழர்கள் என். வி. நடராசன், தணிகை உலகநாதன், எ. பி. ஜனார்த்தனம், எஸ். இராசரத்தினம் பிள்ளை, தி. சு. மறைமலையார் ஆகியோர் சீர்திருத்தம் என்பதுபற்றி விரிவுரையாற்றினர். மணமக்கள் சார்பில் விடுதலை, குடிஅரசு, திராவிடநாடு, ஆகியவைகளுக்கு முறையே ரூபாய் 3, 2, 2, நன்கொடை அளிக்கப்பட்டது. தோழர் வி. எ. எத்திராசன் நன்றி கூறினார்.

o o

9-2-47ல் கொழும்பு நாவலந்திலா தோழர் பேச்சன் அவர்களின் மகன் தோழர் நா. பே. வேலு அவர்கட்கும், குமரெட்டியாபுரம் தோழர் சுப்பையா அவர்களின் இளைய மகள் தோழியர் குருவம்மாள் அவர்களுக்கும் மணமகன் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதன் நினைவாக த. நா. அ ச சீ. சங்கத்திற்கு ரூ 2ம், இன எழுச்சி பத்திரிகைக்கு ரூ. 2ம், குடியரசுக்கு ஒரு ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

கடந்த 27-1-47ல் (தை, 14ம் நாள், திங்கள்) ஆலவாய் மொழியில் எங்களுக்கு அறிஞர் பி. சிதம்பரம் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. திருமணத்தில் தாலி, புரோகிதம், பயனற்ற சடங்குகள் முதலியவை நீக்கப்பட்டன. அதுசமயம் ரேஞ்சர் முத்தசாமி, சி. மனோகரன், கே. எ. மதியழகன், ஆர். ராமலிங்கம் முதலிய தோழர்கள் சீர்திருத்தமணம்குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். எங்கள் மணவிழாவினைச் சிறப்பித்தவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் எங்கள் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களன்புள்ள,
மணமக்கள்: தமிழ்மறை,
தமிழரசி.

(மணத்தின் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது)

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. இன்றிரவு (22-2-47) ஈரோட்டிலிருந்து கொச்சின் எக்ஸ்பிரசில் சென்னைக்கு நிதியளிப்பு விழாவில் கலந்து கொள்ள செல்கிறார்.

## விற்பனைக்கு

பெரியார் அவர்கள் வடநாடு சுற்றுப்பிரயாணத்தின்போது அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில் 'மேல்நாடும் கீழ்நாடும்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவும், வ. ஆ. திருப்பத்தூரில் நடைபெற்ற சுலோச்சனா—சம்பத் திருமணத்தின்போது "பெண்கள் அலங்காரப் பொம்மைகளா?" என்ற தலைப்பில் பேசிய பேச்சும், "காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்று எழுதிய உருக்கமான கட்டுரையும் தனித்தனிப் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. திராவிடர்களனைவரும் படித்துப் பயன்பெறவேண்டிய நூல்கள்; குறிப்பாக காங்கரசில் உள்ள திராவிடர்கள் "காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்ற நூலைப் படித்து உணர வேண்டுகிறோம்.

மூன்று புத்தகங்களின் விலை அணா 5. 6-அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மூன்று புத்தகங்களும் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.